தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(த),திருச்சிராப்பள்ளி-23.

சுற்றறிக்கை நாள்: 19.09.2025

பாரதிதாசன் பல்கலைகழக அறிவுறுத்தலின்படி April 2025 முன்னர் தேர்ச்சி பெற்ற மாணவர்களும் மற்றும் November 2024, April 2025ல் தேர்ச்சிப் பெற்று பட்டம் பெற விரும்பும் அனைத்து மாணவ – மாணவியர்கள், நமது கல்லூரியில் தேர்வு நெறியாளர் அலுவலகம் மூலமாக பல்கலைகழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பம் பூர்த்தி செய்து அனுப்புவதற்கான கடைசி தேதி **15.10.25** ஆகும். மாணவ-மாணவியர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் பொழுதும், விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் பொழுதும் கீழ்கண்டவற்றை தவறாது கடைபிடிக்க வேண்டும்.

- பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ளபடி புதிய விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து விபரங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளது போல இணைக்க அறிவுறுத்தப்படுகிறது. இதனோடு ஆதார் அட்டையின் ஒளிப்பட நகல் (Xerox copy) ஒன்றினை விண்ணப்பத்தின் கடைசியாக இணைக்க வேண்டும்.
- பாஸ்போர்ட் அளவிலான ஒரு புகைப்படத்தை விண்ணப்பத்தில் ஒட்டுவதுடன், அதே அளவிலான மற்றொரு புகைப்படத்தை விண்ணப்பத்துடன் தனியாக அளிக்க வேண்டும். புகைப்படத்தின் பின்பக்கம் பெயர், பதிவெண் மற்றும் CenterCode –030னை எழுதவும்.
- மற்றும் ஒரு பாஸ்போர்ட் அளவிலான ஒரு புகைப்படத்தை தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் உள்ள புகைப்பட படிவத்தில் தங்களுக்குரிய பதிவுஎண் அச்சிடப்பட்டுள்ள கட்டத்தில் ஒட்டவும். பதிவுஎண் அச்சிடப்படாத மாணவர்கள் கட்டத்தின் கீழ் பதிவு எண் மற்றும் பெயரினை தெளிவாக எழுத வேண்டும். புகைப்படத்தில் எக்காரணம் கொண்டும் Attested & Seal அச்சிடப்பட்டு இருக்க கூடாது.
- பல்கலைக்கழக தரவரிசை தேர்வில் முதலிடம் பெற்ற இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு நேரடியாக பட்டம் பெற தகுதிபெற்றவர்கள் ஆவார்கள்.

எனவே பட்டம் பெற விரும்பும் மாணவ – மாணவியர் **22.09.25** முதல் **15.10.25** வரை தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் செலுத்துச் சீட்டினை பெற்று விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்களுக்குரிய தொகையினை K.K. நகர் கனரா வங்கி கிளையில் பணம் செலுத்தி விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **இக்கட்டணமானது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பிக்க மட்டுமே, இது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்கான கட்டணம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

விண்ணப்பத்தில் துறைத்தலைவர் கையொப்பம் மட்டுமே (Signature of the Principal என்ற இடத்தில்) போதுமானது என அறிவிக்கலாகிறது. **Centre Code : 030**

தேர்வு நெறியாளர். முதல்வர்.

பெறுநர்:

அனைத்து துறைத்தலைவர்கள்.
தகவல் பலகை.